RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s1856

# பெண்ணிய தோற்றம் முதல் இன்றைய வளர்ச்சி வரை

லெ. புவனேஸ்வரி [அ, *] தி. பார்த்திபன் [அ,]

[அ] மெய்யியல் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்-613010, தமிழ்நாடு, இந்தியா.

# Origin of Feminism and its Developments

**L. Bhuvaneswari [a, *] T. Parthiban [a, *]**

[a] Department of Philosophy, Tamil University, Thanjavur-613010, Tamil Nadu, India

* Corresponding Author:
bhuvan76eswari@gmail.com

Received: 23-07-2022
Revised: 19-09-2022
Accepted: 01-10-2022
Published: 08-12-2022

**ABSTRACT**

Feminism is the voice of young people who are united with research, humility and courage. Not only from Karaikal Ammaiyar to Kalpana Chawla even Malala who won the Prize for peace. These women teach the morals of life despite the hardships. They are brave and wise women who are the beacon for feminism. Women who have developed their skills in peace, spirituality, science and personality. It is human virtue to appreciate their excellence, growth and effort. That is why in our country women are worshiped as mother and goddess. However, the purpose of this study is to help the community in all ways to increase the women's security, achieve their rights and succeed in their path of progress.

**Keywords:** Feminism, Equality, Female Education, Female Personality, Feminist Thoughts, Motherhood

## முன்னுரை

பெண்ணியம் என்பது ஆணிற்கு இணையான சுதந்திரத்தை அடைவது மட்டுமே ஆகும். ஆனால் சிலர் ஆணினத்தை அடக்கி ஆள்வதோ அல்லது ஆண் சமுதாயத்தை முடக்கிப்போடுவதோ என எண்ணுகின்றனர். இது முற்றிலும் தவறே. பெண்கள் தனக்கு கிடைக்காத சுதந்திரத்தையோ அல்லது தவறவிட்ட உரிமையையோ மீட்டெடுப்பதே பெண்ணியம் ஆகும். பெண்ணியத்தைப் பெற முயல்வது போராட்ட குணம் அல்ல அது ஓர் உரிமைக்குரலே ஆகும். வீட்டையும், நாட்டையும் அடக்கிஆளநினைப்பதல்ல. தனது பங்களிப்பின் மூலம் இல்லத்திலும், உள்ளத்திலும், சமூகத்திலும் தனது அக்கறையையும், ஆதங்கத்தையும், வீரத்தையும், கனிவையும், பணிவையும் பரிமாறி வீட்டிற்கும், நாட்டிற்கும் நல்லன செய்து நாட்டின் வளர்ச்சியை சீர்தூக்கிப்பார்க்க ஏற்படும் அவாவே ஆகும். அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு என முடக்கிப் போட்ட சமுதாயத்திலிருந்து முளைத்தெழுந்து ஆர்ம்ஸ்ட்ராங் தொட்ட நிலா முதல் தனது ஆளுமையை அழகாக வெளிப்படுத்தும்பாங்கு பெண்ணிற்கு உண்டு என்பதை சமூகம் உணர்தல் வேண்டும்.

## பெண்ணியம் - பெயர் விளக்கம்

ஆங்கிலத்தில் 'feminism' என்று வழங்கும் கலைச்சொல்லையே தமிழில் பெண்ணியம் என்று கூறுகிறோம். பெண்ணியம் என்பது அறிவுத்துறை சார்ந்த ஒரு சமூக விஞ்ஞானமாகும். பெமினிசம் என்ற சொல்லுக்குத் தமிழில் பெண்ணியம், பெண்ணிலை வாதம், பெண்ணிலை ஏற்பு, மகளிரியல், பெண்ணலக்கொள்கை என்று பல சொற்கள் வழங்கப்படுகின்றன. இவற்றுள், பெண்ணிலை வாதம் என்ற

சொல் பொருத்தமாக உள்ளது என்றாலும் இது சமூகவியல் நோக்கில் பெரிதும் எடுத்தாளப்படும் ஒன்றாகும். எனவே கல்வியாளர்கள் பெண்ணிலை வாதம் என்ற சொல்லைவிட பெண்ணியம் என்ற சொல்லையே பெரிதும் பயன்படுத்துகின்றனர். மேலும் கருத்துக் குழப்பத்திற்கு இடம் தராமல் தெளிவாக இருப்பதாலும் பெண்ணியம் என்ற சொல்லையே பெமினிசம் என்ற ஆங்கிலச் சொல்லின் தமிழ் இணைச்சொல்லாக வழங்கலாம். இதுவே பொருத்தமான கலைச்சொல் ஆகும் (Kumarsamy, 2001). 1889 வரையில் 'womanism' என்ற சொல் பெண்களின் உரிமைப் பிரச்சினைகளையும் அதன் அடிப்படையிலான போராட்டங்களையும் உணர்த்தப் பயன்பட்டு வந்தது. 1890 முதல் womanism என்பது feminism ஆனது. 1894ம் ஆண்டில் வெளிவந்த ஆக்ஸ்போர்டு ஆங்கில அகராதியில் முதன்முதலாக இச்சொல் எடுத்தாளப்பட்டது (Kumarsamy, 2001).

## பெண்ணியம் ஆணுக்கு எதிரானது அல்ல

பெண்ணியவாதிகள் ஆண்களை வெறுப்பவர்கள் அல்லர். ஆயின், ஆண் நாயகத்தையும், ஆணாதிக்கத்தையும், ஆண் என்னும் அகம்பாவத்தையும் வெறுப்பவர்கள். ஏனெனில், இத்தன்மைகள்தாம் ஆண் மேலாதிக்கமாகவும், சுயநலமாகவும், ஆக்கிரமிப்பாகவும், கொடுமையாகவும் வெளிப்படுகின்றன. இதன் காரணமாக ஆண்கள் பெண்களைச் சமமாக மதிக்காது, பெண்களை தங்களின் உடமை அல்லது ஒரு பொருள் எனக் கருதி செயற்படுகின்றனர். இவர்கள், பெண்ணியவாதிகளின் எதிரிகளாகின்றனர். பெண்ணியவாதிகள் பெண்ணியக் கருத்துக்களை ஆதரிக்கும் ஆண்களுடன் சேர்ந்து செயற்படவே விரும்புகின்றனர். ஆனால் அவ்வாறான ஆண்களின் எண்ணிக்கை மிகக் குறைவு. இதற்குக் காரணம் ஆண்களும், பெண்களும் வளர்க்கப்படும் சமூகச் சூழ்நிலைகளேயாகும். பெண்களின் முன்னேற்றத்திற்காக எடுக்கப்படும் முயற்சிகள் அனைத்தும் ஆண்களுக்கு எதிரானவை என்ற எண்ணமே ஆண்களின் கருத்தில் மேலோங்கி நிற்கின்றது (Raj Gowthaman, 2018).

## அமெரிக்க / ஐரோப்பிய பெண்ணியம்

அமெரிக்காவில் 1848-இல் கூடிய செனேகா நீர்வீழ்ச்சிக் கூட்டத்திலிருந்து (Seneca Falls Convention of 1848) பெண்ணியச் செயல்பாடு தொடங்கியது. பிரிட்டனைப் போல இங்கும் பெண்ணியம் பத்தாண்டுகளாக மெதுவாக வளர்ந்து வந்தது. அனால் அமெரிக்காவில், பிரிட்டனைப் போலன்றி பெண்களின் உரிமைகள் என்ற பிரச்சினை, தவிர்க்க இயலாதபடி கறுப்பின அடிமைகளின் உரிமைகள் பற்றிய விவாதத்தை இணைத்தே பேசப்பட்டது. இதில் சம்பந்தப்பட்ட எல்லோரும் பெண்ணியவாதிகள் இல்லை. அமெரிக்காவில் நடந்த முதலலைப்பெண்ணிய வளர்ச்சி (First wave of feminist development), பிரிட்டனிலிருந்து வேறுபட்டிருந்தது. அமெரிக்கா மாநில சட்டமன்றங்கள், மத்திய அரசாங்கத்திலிருந்து தற்சுதந்திரமாகச் சீர்திருத்த நடவடிக்கைகளை நிறைவேற்றும் அதிகாரம் கொண்டிருந்தன. இதனால் சில மாநிலங்களில் விரைவிலேயே (1869, 70) பெண்களுக்கு வாக்களிக்கும் உரிமை கிடைத்தது (Raj Gowthaman, 2018).

1860களையும் 70-களையும் கல்விச் சீர்திருத்த ஆண்டுகள் எனலாம். இங்கிலாந்தில் பெண்கள் பள்ளி கல்லூரிகள் அனுமதிக்கப்பட்டன. ஆயினும் கேம்பிரிட்ஜில் பயின்ற பெண்களுக்கு 1948 வரையிலும் கூட, ஆண்களுக்கு வழங்கிய பட்டங்களுக்குச் சமமான பட்டங்கள் வழங்கப்படவில்லை. அதுவரை மருத்துவக் கல்வி ஆணின் ஏகபோகமாக இருந்து வந்தது. பெண்கள் மருத்துவர்களானார்கள். இவர்களில் சோபியா என்பவர் சொந்தமாக மருத்துவப் பள்ளியொன்றைத் தொடங்கினார் (The London School of Medicine for Women - 1874). 1880-ல் பெண்கள் மருத்துவம் பயின்று பிரிட்டனில் மருத்துவப்பணி செய்யச் சாத்தியமாயிற்று (Raj Gowthaman, 2018).

## இந்தியப் பெண்ணியம் அறிமுகம்

இந்தியப் பெண்ணியத்தை இரண்டு காலகட்டங்களாகப் பிரிக்கலாம். முதலாவது, இந்தியா சுதந்திரமடையுமுன்பு உள்ள காலம் இரண்டாவது, இந்திய சுதந்திரத்திற்குப் பின் உள்ள காலம். முதல்

காலகட்டத்தில் இந்தியப் பெண்ணியவாதிகள் ஆங்கிலேயர்களின் ஆளுகைக்குட்பட்டுச் செயலாற்றினர். இரண்டாவது காலகட்டத்தில் அவர்கள் சுதந்திரமாகச் செயலாற்ற முடிந்தது. ஆயின், இரு காலகட்டங்களிலும் இந்தியப் பெண்ணியம் பெரும்பாலும் செயற் திட்டங்களாகவே உள்ளது. அவ்வாறே, இந்தியப் பெண்ணியம் இங்கு விளக்கப்படுகின்றது (Muthuchidambaram, 2017).

## இந்தியப் பண்பாட்டின் மறுமலர்ச்சிக்காக உருவாகிய நிறுவனங்கள்

1828-ல் கொல்கத்தாவில் பிரம்மசமாஜத்தை இராஜாராம் மோகன்ராய் தொடங்கினார். இவரது முயற்சியாலும் ஆங்கில அரசின் உதவியாலும் 1829-ல் பெண்கள் உடன்கட்டை ஏறுதலை ஒழிக்க சட்டம் கொண்டுவரப்பட்டது. மேலும் விதவையின் மறுமணத்திற்காகவும் போராடினார். 1875-ல் ஆரிய சமாஜம் சுவாமி தயானந்த சரஸ்வதியால் பம்பாயில் தொடங்கப்பட்டது. இவ்வியக்கம் ஆண்/பெண் சமத்துவத்தை நிலைநிறுத்தவும், பெண்களின் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தவும் பாடுபட்டதோடு சக்தி வழிபாட்டை உயர்வாக மதித்து மேலும் பால்ய விவாஹம் தடுப்பு மற்றும் விதவை மறுமணம், பர்தா முறையை எதிர்த்து பாடுபட்டது (Muthuchidambaram, 2017).

அமெரிக்காவின் நியூயார்க் நகரில் நிறுவப்பட்ட தியசாபிகள் நிறுவனம் அதன் கிளையை 1879-ல் சென்னை அடையாரில் அன்னிபெசன் அம்மையார் தலைமையில் தொடங்கி விதவை மறுமணத்திற்காக குரல்கொடுத்தது. ஆனால் வயதான விதவைகள் மணம் செய்து கொள்வதை விரும்பவில்லை. 1897-ல் தொடங்கப்பட்ட இராமகிருஷ்ண மடம் விவேகானந்தரால் ஆரம்பிக்கப்பட்டு பெண்கல்விக்காக கல்விக்கூடங்களை நிறுவியதோடு பெண்களை சக்தியின் வடிவாகப் போற்றினார் (Muthuchidambaram, 2017). 1923-ம் ஆண்டு ராஜ்காட் மாநிலம் முதலாக ஒவ்வோர் மாநிலமாக பெண்களுக்கு வாக்குரிமை அளித்தது (Muthuchidambaram, 2017). மேலும் பெண்சிசுக்கொலை உ.பி, பஞ்சாப், இராஜஸ்தான்,குஜராத் மாநிலங்களில் ராஜபுத்திரர்களின் வழக்கமாக இருந்ததை 1870-ல் ஆங்கில அரசு சட்டம் போட்டு தடுத்து இருபாலின குழந்தைகளின் பிறப்பையும் பதிவு செய்ய ஆணையிட்டது. 1961-ம் ஆண்டு வரதட்சணைக் கொடுப்பதையும், வாங்குவதையும் தடுக்க சட்டம் கொண்டுவரப்பட்டது (Muthuchidambaram, 2017). 1971-ல் கருகலைப்புச் சட்டமும் கொண்டுவரப்பட்டது. 1994-ம் ஆண்டு கருவில் உள்ள குழந்தை ஆணா/பெண்ணா என்பதை அறிந்து குழந்தையை அழிக்கும் தவறைக் கண்டித்து சட்டம் வந்தது. பெண்களின் சொத்துரிமைக்காகவும் பல சட்டங்கள் வந்தது (Muthuchidambaram, 2017).

## பெண்கல்வி

19ம் நூற்றாண்டிலிருந்து இன்று வரை இந்தியப் பெண்களின் முன்னேற்றத்திற்காக இடைவிடாது எடுக்கப்பட்ட முயற்சி பெண்கல்விக்கே ஆகும் (Muthuchidambaram, 2017). கல்வி என்பது அறிவின் நுழைவாயில் ஆகும் எனவேதான் சான்றோர்கள் அறிவே தெய்வமென கருதுகிறார்கள். எனவேதான் மஹாத்மாவும் லூதர்கிங்கும், வேதநாயகம் பிள்ளையும், வித்யாசாகரும், திருவிக போன்றோரும் பெண்கல்வியை வற்புறுத்தினார்கள். மேலும் பாரதியோ "பெண்கள் அறிவை வளர்த்தால் வையம் பேதைமை அற்றிடும் காணீர்" என்கிறார் (Kumarsamy, 2001). மேலும் பாரதி,

"நிலத்தின் தன்மை பயிர்க்குள தாகுமாம்

நீசத்தொண்டும் மடமையும் கொண்ட தாய்

தலத்தில் மாண்புயர் மக்களைப் பெற்றிடல்

சாலவே அரிதாகுமோர் செய்தியாம்"

என்ற கவிதை மூலம் கற்ற பெண்ணே நற்றாய் என்கிறார் (Kumarsamy, 2001). திரு.வி. கவும் இந்நாளில் நம் நாட்டில் வால்மீகிகள், வியாசர்கள், நக்கீரர்கள், திருவள்ளுவர்கள் தோன்றாமைக்குக் காரணம் தாயை கல்வி இழக்க செய்ததுதான் என்கிறார். இக்கருத்தையே பாரதிதாசனும்

கல்வியறிவற்ற தாயை களர் நிலம் என்கிறார். திருவள்ளுவரும் 'நிலத்தின் தன்மையை அதில் தோன்றிய பயிர் காட்டிவிடும்' என்கிறார் (Kumarsamy, 2001).

மேலும் பாரதி தனது ஆன்மிக குருவான நிவேதிதாவின் அறிவொளி பெற்ற, மன விடுதலை அடைந்த புதிய பெண்மையைப் போற்றினார் (Kumarsamy, 2001). இவரைப் போலவே அனைத்து பெண்களும் திகழவேண்டுமென விரும்பியதாலேயே "நிமிர்ந்த நன்னடையும், நேர்கொண்ட பார்வையும்" என்ற கவியை பாரதியார் எழுதினார். பெண்ணியத்தின் பெருமையைப் போற்றவே பாஞ்சாலி சபதத்தையும் எழுதினார் பாரதியார். 'தாய்க்கு மேலே இங்கோர் தெய்வமுண்டோ' என்றும் 'சக்தி அருளாலன்றோ பிறந்தோம் பார்மேல்' என்றும் பாரதி பாடுகிறார் (Arasu, 2001). மேலும் பாரதியார் ஔவையாரைப் பெரிதும் பாராட்டுகிறார். ஔவையார் எழுதிய வெண்பாக்கள், குறள், நீதிநூல்கள் ஆகியவை பெரிதும் பொருள் செறிவும் எளிமையும் உடையன என்றும் ஔவையை ஓர் ஆத்மஞானி என்றும் அறம்/ பொருள்/ இன்பம்/வீடு ஆகிய நான்கு புருஷார்த்தங்களையும் பாடிய ஔவையை தமிழர்களின் சொத்து என்கிறார் (Kumarsamy, 2001). இதிலிருந்து ஔவையின் கல்வியும், ஆளுமையும் நமக்கு விளங்கும்.

சங்ககால நாயன்மார்களில் இருந்த மூன்று பெண்களைப்போலவும், ஆழ்வார்களில் இருந்த ஆண்டாளைப்போலவும் பெண் கவிஞர்களாகவும், மூன்று பெண்பாற் புலவர்கள் மங்கையர்கரசி, இசைஞானி, காரைக்காலம்மையார் போலவும் மற்றும் மீராபாய் போன்றோர் ஞானத்திற்கு நிகராக இன்றைய பெண்களின் அறிவுநிலை மேம்படவேண்டும் (Vennila, 2018). மேலும் பெண்கல்வி என வரும்போது இன்றைய மலாலாவை நாம் நினைவு கூறாமல் இருக்கமுடியாது. இன்றைய புதிய தலைமுறையினருக்கு பேனா கொடுக்கப்படவில்லை என்றால் தீவிரவாதிகளால் அவர்களுக்கு துப்பாக்கி கொடுக்கப்பட்டுவிடும் என்று வீரதீரமாக 2010ல் ஜசிரா தொலைக்காட்சி நேர்காணலில் 11 வயது பாகிஸ்தானிய சிறுமியாக இருந்த மலாலா முழங்கினார். தன்னை எப்போதும் தாலிபான்களால் சுடப்பட்ட பெண் என்று சுட்டிக்காட்டப்படுவதைவிட 'பெண்கல்விக்காகப் போராடிய பெண்' என்று குறிப்பிடுவதையே பெரிதும் விரும்புகிறார். உயிரை பணையம் வைத்து பெண்கல்விக்காக போராடிய இச்சிறுமி இன்று அமைதிக்கான நோபல்பரிசை பெற்றவராவார் (Jagatha, 2017).

"குஞ்சி அழகும் கொடுந்தானைக் கோட்டழகும்

மஞ்சள் அழகும் அழகல்ல - நெஞ்சத்து

நல்லம் யாமென்னும் நடுவு நிலைமையாம்

கல்வி அழகே அழகு"

நாலடியாரின் இப்பாடலின் மூலம் கல்வியின் முக்கியத்துவத்தை நாம் உணரலாம். இது கல்வியின் அழகே அழகு மற்ற எவையும் அழகல்ல என்பதை விளக்கும் பாடலாகும் (Kumarsamy, 2001).

## பெண் அடிமைத்தனமும் / ஆளுமையும்

தன் குறுகிய வாழ்வனுபவம் மீண்டும் மீண்டும் தன்னை வட்டத்திற்குள் சுழற்றிக் கொண்டிருப்பதைப் பேசுகிறார் ஒரு கவிஞர்.

"எங்கேயோ கேட்ட ஞாபகம்

உலகம் உருண்டை என்று.

மண்டியிட்டு

குனிந்து வளைந்து

எட்டி

நிமிர்ந்து நடந்து

எப்படிப் பார்த்தாலும்

சதுரமாய்த் தான் தெரிகிறது

என் வீடு ஜன்னலில்"

பெண்ணைப் பராமரிப்பது, பெண்ணைப் போற்றுவது போன்ற நடவடிக்கைகள் பெண்களுக்கான முக்கியத்துவத்தை அதிகரிப்பதுபோல் வெளித்தோற்றத்தில் தோன்றினாலும், பெண்ணைத் தன் சொத்தாகப் பாவிக்கும், ஆணாதிக்க மனோபாவத்தின் வெளிப்பாடே என வெளிப்படுத்துகின்றன (Vennila, 2018). பெண்ணின் ஆளுமை சமூகப் பாலியல் வன்முறையால் ஒடுக்கப்படுகிறது. ஒடுக்கப்படும் பெண்ணின் ஆளுமைபற்றி பெண்ணிய நோக்கில் விளக்கிக்கூறுதல் பெண்ணியத்தின் கடமையாக எண்ணப்படுகிறது. இதற்கு ஆளுமைபற்றி வாழ்வியற்களஞ்சியம் கூறியிருக்கும் கருத்தை முன்வைத்துத் தெளியலாம். "தனிமனிதனுடைய எண்ணங்கள், செயல்படும் முறை, நடத்தைகள், அவன் பிறருடன் பழகும் முறை, மனப்பான்மைகள், அவனுடைய வாழ்க்கைத் தத்துவம், அறிவாற்றல், உணர்ச்சிகள் ஆகிய யாவும் சேர்ந்த தொகுப்பிலிருந்து ஏற்படும் ஒரு தனித்தன்மையே ஆளுமை எனப்படும். ஒருவருடைய உடல் தோற்றமும், ஒருவரது உடைபாணியும் நடையும் ஒருவரிடம் காணப்படும் அன்பு, பொறாமை, ஊக்கம், அச்சம், இரக்கம், நன்றியுணர்வு, தந்திரம் போன்ற பலவிதமான பண்புகளும் ஒருவருடைய ஆளுமையில் அடங்கும்" (Aranga malliga, 2015). பெண்களின் ஆளுமை இயல்பான ஆளுமை உள்ள பெண்ணாக இல்லாமல், பெண்ணின் ஆளுமை மற்றும் பண்பு அமைப்புக்கள் புறஉலக நடப்புகளால் ஒருமுகப்படுத்தப்படுகின்றன (Aranga malliga, 2015).

பெண்ணியம் என்கிற ஒரு சொல்லுக்கு என்ன பொருள் எடுத்துக்கொள்ளலாம் என்றால், பெண்களை இயக்குவது. ஓர் இயக்கமாக வழிநடத்திச் செல்வது, ஒன்று சார்ந்து இயங்க வைப்பது, பெண்ணியம் என்றால் அது ஓர் இயக்கம்தான். நிறைய பேர் அதை உரிமை சார்ந்தது என்று மட்டும் சொல்கிறார்கள். அல்ல, எனக்கு நடக்கும் ஒடுக்குமுறை ஒருமாதிரி இருக்கும். இன்னொரு பெண்ணின் ஒடுக்குமுறை வேறுமாதிரி இருக்கும். ஒவ்வொரு சாதியிலிருந்தும் அவர்களுக்கான சமூகப் பண்பாட்டுத் தளத்தில் இருக்கின்ற ஒடுக்குமுறை எல்லாம் பொதுமைப்படுத்தி அந்த பொதுமையான விஷயங்களிலிருந்து விடுதலைக் கோரக்கூடிய இயங்கியலைப் பேசக்கூடியதுதான் பெண்ணியம் என்று பெண்ணிய சிந்தனையாளர் அரங்க மல்லிகா கூறுகிறார் (Aranga malliga, 2015).

உதாரணமாக, 1903ம் ஆண்டு இயற்பியலில் பெரிஸ் க்யுரிக்குக்கும், ஹென்ரிபெக் கியூரல் என்பவருக்கும் கூட்டாக பரிசு வழங்க முடிவுசெய்தாலும் க்யூரியின் மனைவி மேரிக்யூரிக்கு பெண் என்பதாலேயே அவர் பெயர் தவிர்க்கப்பட்டது. இருப்பினும் கடைசிவரை போராடினார் மேரி அவர்கள். எனவே தேர்வுக்குழு அவர் பரிந்துரையை ஏற்றுக்கொண்டது (Subash Chandra bose, 2018). எனவே ஒவ்வொருவருக்குமான ஒடுக்குமுறையும் வெவ்வேறாக இருக்கும். இதைமீறி வெல்வதே ஆளுமையாகும். மேலும் ஹெலன்கெல்லர் என்பவர் தனது ஊனத்தையும் மீறி வென்றதும் ஓர் மிகச்சிறந்த ஆளுமைதான் (Thiraviyam, 1963). மேலும் அன்னைதெரேசா அவர்கள் தன் அன்பினாலும், தொண்டினாலும் உலகையே தன் ஆளுகையின் கீழ் கொண்டுவந்தார். ஒரு இலட்சியத்தை அடைய அதில் விடாபிடியாய் நின்று, சிரமங்களைத் தாங்கி, அடிபிறழாமல் முன்னேற வழிகாட்டும் படிப்பினையை அன்னையின் வரலாற்றிலிருந்து நாம் அறியலாம் (Pasumaikumar, 2008). மேலும் இராமநாதபுர மன்னருக்கு மகளாக பிறந்த வேலு நாச்சியார் இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் வெள்ளையரை எதிர்த்து ஆயுதம் ஏந்தி போராடி இழந்த நாட்டை மீட்டுக்காட்டிய முதல் பெண்மணி ஆவார். (Jeevabharathy, 2004) இந்தப் போரில் வேலுநாச்சியாருக்கு உறுதுணையாக இருந்தது அவரது தோழி குயிலி தான். இவர் தனது மேனிமுழுவதும் எண்ணெய் தடவி தீவைத்துக் கொண்டு நேரடியாக ஆங்கிலேயரின் ஆயுதக் கிடங்கில் குதித்ததால் வெள்ளையரின் தோல்வி எளிதாகியது. இந்திய வரலாற்றில் முதல் பெண் வெடிகுண்டாக மாறியவர் குயிலிதான் (Jeevabharathy, 2007). இவர்களது ஆளுமை நமக்கெல்லாம் ஒரு படிப்பினை ஆகும்.

## பெண்களுக்கான சட்டங்களும் பெண்மீட்பியற்சிந்தனைகளும்

இந்திய அரசமைப்புச் சட்டம் பெண்களுக்குப் பல உரிமைகளை உறுதி செய்திருக்கிறது. இந்தச் சட்டத்தின் பிரிவுகள் 15, 16, 39, 42, 51 இவை பெண்கள் பாகுபாடின்றி நடத்தப்படவும், சம வாய்ப்பு சம ஊதியம் பெறவும், பெண்களைச் சிறுமைப்படுத்துவதைத் தடுக்கவும் வகை செய்திருக்கின்றன. (Devanathan, 2018) இந்திய அரசு 2001ஆம் ஆண்டை பெண்ணுரிமைகளைப் போற்றும் ஆண்டாக அறிவித்தது. பெண்களுக்கு 33 சதவீத இட ஒதுக்கீடு வழங்கும் மசோதா 2010 மார்ச்சில் ராஜ்ய சபாவில் கொண்டு வரப்பட்டது. அனால் என்ன, பெண் சிசுக்கொலை, பாலின ஒருதலைப்பட்சம் (Gender bias), வன்புணர்ச்சி, கொலை, வரதட்சணை சாவு இவற்றுக்கெதிராக பெண்கள் நல அமைப்புகள் போராடுவது இன்றளவும் தொடர்கிறது (Devanathan, 2018).

எனவே சட்டம் மட்டுமே பெண்களுக்கான பாதுகாப்பைக் கொடுத்துவிடமுடியாது. இதற்கு பெண் கல்வியும் இதனால் ஏற்படுகின்ற விழிப்புணர்வும் மிக அவசியமாகும். பெண்ணியம் என்பது வேலைக்குச் செல்லுதல் அல்லது சொந்தமாகத் தொழில் செய்தல் என்பது அலுவலகங்களுக்குச் செல்லுதல் என்று மட்டும் பொருளல்ல. சுயமாக தங்கள் காலில் நிற்கின்ற தைரியத்தையும் எந்தச் சூழ்நிலையையும் நேருக்கு நேர் சந்திக்கிற மனோபாவத்தையும், எந்தச் சூழ்நிலையிலும் தங்கள் சுயத்தை இழந்து விடாமல் இருக்கின்ற கட்டுப்பாட்டையும் அது கொடுக்க வேண்டும். கட்டுப்பாடுகள் என்பது நம்மை அடிமைப்படுத்துவதாக ஆகாது, கட்டுப்பாடு என்பது நமக்கு நாமே போட்டுக் கொள்ளும் ஒரு சங்கிலி, கட்டுப்பாடுகள் நம்மை நெறிப்படுத்தி செம்மையான பாதையில் செல்ல வைக்கும் (Jagatha, 2017). அறிஞர் திரு.வி. க "கல்வியாற் பெரும் அறிவு விளக்கம் மட்டும் வாழ்விற்குப் போதாது. அறிவோடு ஒழுக்கமிருத்தல் பொருத்தம். ஒழுக்கமில்லா வாழ்வு எத்தகையதாயினும், அதனால் வாழ்வு நோக்கம் நிறைவேறாது. ஒழுக்கத்துக்கு உரிய கல்வியே கல்வி. மற்றையது கல்வியாகாது. தாய்மைக்குரிய பெண்ணிற்கு ஒழுக்கம் உயிர் போன்றதாகும். ஒழுக்கமே பெண்ணாக வளர்தல் வேண்டும்" என்கிறார் (Kumarsamy, 2001).

பெண்களின் வழியே வெளிப்பட்டுத் தெரிகிற தாய்மைதான் காந்தி, மார்க்ஸ், ஏசு, வள்ளுவர் முதலிய சான்றோர்களுக்குள் இயங்கியது. சமூக வாழ்வின் மேம்பாட்டுக்காக தம்மை இணைத்துக் கொள்கிற அனைவருக்குள்ளும் இயங்குவது இந்தத் தாய்மைதான். இயற்கையை, உயிர்களை, மனிதவாழ்வை இன்று காப்பாற்றக்கூடியது இந்தத் தாய்மைப்பண்புதான். படைப்புத்திறன் மிக்க கவிஞர்கள், படைப்பாளிகள் இந்தத் தாய்மையை தமக்குள் இயல்பாக உணர்ந்திருக்கிறார்கள். பெண்ணியம் தன்னை ஆழத்தோண்டிச் செல்லும்பொழுது, தன் ஆதார சக்தியாக இந்தத் தாய்மைப் பணப்பைத் தான் கண்டுபிடிக்கிறது. இந்தத் தாய்மைதான் இன்று உலகைக் காப்பாற்றும். இந்தக் குணத்தைக் காலம் காலமாக தமக்குள் தக்கவைத்துக் கொண்ட பெண்கள் நம் வழிபாட்டுக்குரியவர்கள். பெண்ணிடமிருந்து இந்த வையகம் இப்பொழுதேனும் நீதியைக் கற்றுக் கொள்ள வேண்டும். தியாகத்தைக் கற்றுக்கொள்ளவேண்டும். அன்பைக் கற்றுக்கொள்ளவேண்டும். 'அன்பில் தழைத்திடும் வையம்' என்று பாரதி சொன்னது நூற்றுக்கு நூறு உண்மை (Manjuladevi, 2017).

இக்கருத்தைதான் வள்ளல்பெருமானும் வலியுறுத்துகிறார். அதாவது உலகிலுள்ள அனைத்து உயிர்களிலும் இறைவன் இருக்கிறான் என்றும் மேலும் எல்லா பொருட்களிலும் இருக்கிறான் என்றும் எனவே அனைத்து ஜீவராசிகளிலும் இருக்கும் ஆன்மாவிலும் இறைவனைக் காணலாம் என்பதாலேயே ஆன்மநேயஒருமைப்பாட்டை வலியுறுத்துகிறார். இந்நிலையை அனைவரும் கடைபிடித்தோமேயானால் சகஉயிராகிய பெண்ணுள்ளும் இறைவன் இருக்கிறான். சக மனிதனிடத்தும் ஜாதி மத பேதமின்றி இறைஉணர்வோடு பிற ஆன்மாக்களை மதிக்க ஆரம்பித்தால் உயர்வு, தாழ்வோ, ஒவ்வொன்றிற்காகவும் போராட வேண்டியதோ தேவைப்படாது. இந்தக் கருத்தாக்கம் அனைத்து உயிர்களுக்கும் பொருந்துமென்பதால் இதில் மரம் செடி கொடிகளும் அடங்கும். எனவேதான் அமிர்தா தேவி என்னும் பெண் 'ஒரு மரத்தைக் காப்பாற்ற ஒரு மனிதத் தலைதான் சன்மானம் என்றால், அந்த சன்மானத்தைத் தாராளமாகத் தருகிறேன்' என்று ஒரு வன்னி மரத்திற்காகத் தன் தலையை வெட்டிக் கொடுத்து உயிர்த்தியாகம் செய்த வீர வரலாற்றுக்கு உரிய பெண்மணி ஆவார் (Jagatha, 2021).

"பொருளின் புறத்தோற்றம் ஒவ்வொன்றிலும் உள்ளீடாய் உயிரைக் காண்பது, பண்டைய மனிதன் செய்ததுபோல் மரத்திலும், விலங்கிலும் காதலிலும், பிறப்பிலும், மன உயர்விலும், ஆன்ம இருப்பிலும், தவிர்க்க முடியா அழிவிலும், சாவிலும் கூட இறைவனை உணர்வது எங்கும் எல்லாவற்றையும் முழு உயிர்த் தொகுதியின் நன்மை தீமையால் மதிப்பிடுவது, பெரு முழுமையில் முழு விருப்பத்தோடு இணைந்து போவது கரைந்து போவது - இதுதான் சமயம் என்கிறார் தாயுமானவர்.

"எல்லா உயிரும் இன்புற்றிருப்பதுவே

அல்லாமல் வேறு ஒன்றும் அறியேன் பராபரமே தாயுமானவர்"

இன்று ஊடக மோகத்தால் பெண்களே பெண்களுக்கு எதிரியாகிகொண்டு இருக்கின்றனர் (Kumarsamy, 2001). மேலை நாட்டுப் பெண்களைப் போல் மது அருந்துவதும், புகைபிடித்தலும், மேலும் அரைகுறை ஆடையுமாக தன்னையே தரம்தாழ்த்திக்கொள்கின்றனர். இவர்களது அருவருக்கத்தக்க ஆடை அமைப்பினால் வெறிபிடித்த மிருகங்கள் பாதுகாப்பாக இருக்கும் இவர்களால் ஏற்படும் வெறியால், கேட்பாரற்ற, சக்தியற்ற குழந்தைகளையும், பெண்களையும் சீரழித்து கொல்கின்றனர். இவர்களது கொலையில் இந்த மிருகங்கள் மட்டுமன்றி ஊடகவெறியினால் தரக்குறைவான ஆடை அணியும் பெண்களும் காரணமாகின்றனர். எனவே பெண்களே பெண்களுக்கு எதிரியாகாமல் இருக்க பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் வளர்ப்பிலும், ஆன்ம கல்வி போதனையிலும், விழிப்புணர்வோடும் அனைத்து உயிர்களின்மீதும் எல்லா பெண்குழந்தைகளின்மீதும் அக்கறையோடும் இருத்தல் அவசியமாகிறது. அனைத்து உயிர்களிலும் என்னைக் காண்பவனே உண்மையான பக்தன் என்கிறது கீதை.

## முடிவுரை

இப்பிரபஞ்சமானது அனைத்துயிர்களுக்காகவுமே ஆக்கப்பட்டதே தவிர ஆணுக்காகவோ, பெண்ணுக்காகவோ என தனித்தனியாகப் படைக்கப்படவில்லை. சிவம் இல்லையேல் சக்தி இல்லை. சக்தி இல்லையேல் சிவம் இல்லை. எனவே, இவ்விரு உயிர்களும் உயர்வு, தாழ்வின்றி ஒன்றிணைந்த சிந்தனையாலும், செயலாலும் மட்டும்தான் இவ்வுலகம் உய்வுபெற முடியும் எனவே பெண்களை வார்த்தையாலோ, செயலாலோ மட்டுமின்றி உள்ளத்தால் மதித்தால் மட்டுமே மானுடம் ஓங்கும். ஒரு நாட்டின் வளர்ச்சி என்பது பெண்களின் வளர்ச்சியால் மட்டுமே அதிதீவிரமடையும். எனவே பெண்களின் வளர்ச்சியைச் சீர்படுத்தி பெண்ணியத்தை ஓங்க வைக்கவேண்டுமெனில் பெண்ணிற்குப் பெண் எதிரியாகும் நிலையோ, பெண்களின் பாதுகாப்பற்ற சூழலோ, வரதட்சணை கொடுமைகளோ, பெண்களின் உரிமைகள் பறிக்கப்படும் நிலையோ, பெண்களை அடக்கி ஆளும் வர்க்கங்களின் மனோபாவமோ மாறினால் மட்டுமே பெண்ணியம் மலரும். ஏனெனில் பெண் என்பவள் சக்தியாக பாவிக்கப்படுபவளாவாள். பெண்ணியம் சிறந்தோங்கினால் மட்டுமே நாடு சக்தியின் பிரதிபிம்பமாகத் திகழும். பெண் என்பவள் வெறும் காதல் பதுமைகள் அல்ல. எனவே அவளின் கற்பையும், கனவையும் களவாடி உங்கள் குலநாசத்தை நீங்களே நிர்ணயம் செய்துகொள்ளாதீர்கள். ஏனெனில் அவளின் கண்ணீர் துளி மதுரையை எரித்த கண்ணகி போல் உங்களை வேரோடு சாய்க்கும் காலம் வெகுதொலைவில் இல்லை. பெண்களைக் காக்கத்தவறிய ஆண்களும், அரசும் அடியோடு அழியும் என்பதை உணர்த்தத்தான் மகாபாரதம் பிறந்தது. எனவே பொருளாதார வளர்ச்சியோ, அணுஆயுத புரட்சியோ எந்த ஒரு நாட்டையும் காக்க இயலாது. பெண்மையைப் போற்றும் சமுதாயம் மட்டுமே சீரும், சிறப்புமாக விளங்கும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. எனவே பெண்ணியம் போற்றி கண்ணியம் காப்போம்.

## References

Aranga Malliga, (2002) Tamil Illakiyamum Penniyamum, New Century Book House, Chennai, India.

Aranga Malliga, (2015) Pularum Arathin Kaalai, Kalaignan Pathippakam, Chennai, India.

Arasu, V. (2001) Penniyamum Bharathiyum, Alaigal Veliyeetagam, Kodambakkam, Chennai, India.

Devanathan, C.S. (2018) Pengalukku Ethirana Vanmuraigal (Theervukkana Vazhimuraigalum), National publishers, Chennai, India.

Jagatha, (2017) Pen Kalvi Porali Malala, National publishers, Chennai, India.

Jagatha, (2021) Marangalukkana Marana Porali Amrita Devi Bishnoi, Chennai, India.

Jeevabharathy, K. (2004), Velu Naachiyaar, Kumaran Pathippagam, Chennai, India.

Jeevabharathy, K. (2007) Vaazhum Varalaru, Annam, Thanjavur, India.

Manjuladevi, J. (2017) Gnani Vaasagam Naanooru, Puthupunal, Chennai, India.

Muthuchidambaram, C. (2017) Penniyam Thottramum Valarchiyum, New Century Book House, Chennai, India.

Pasumaikumar, (2008) Punithar Annai Theresa, Arivu Pathipagam, Chennai, India.

Raj Gowthaman, (2018) Penniyam Varalaarum Kotpaadugalum, New Century Book House, Chennai, India.

Subash Chandra bose, P. (2018) Magathaana Peruraigal, Annam, Thanjavur, India.

Thiraviyam, K. (1963) Radhakrishnan Peruraigal: (Mudhal Thougthi: 1952-56), Palaniappa Brothers, Chennai, India.

Vennila, A. (2018) Kanavum Vidiyum, Sahitiya Academy, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License